# 9. ரம்ஜான்–பேரவைத் தலைவரின் வாழ்த்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நாளை ரம்ஜான் பண்டிகை கொண்டாடும் இஸ்லாமியப் பெருமக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய வாழ்த்துகளோடு, என்னுடைய வாழ்த்துகளையும், பேரவை உறுப்பினர்களுடைய வாழ்த்துகளையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காலை 10–00 மணி முதல் மாலை 6–35 மணி வரை சபை நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள், அலுவலர்கள், பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 5–9–2011 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 6–36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

# 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*ஏதுமில்லை*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*80. மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)*

*81. மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)*

*82. மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)*

*83. மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)*

*84. மானியக் கோரிக்கை எண் 29–கலை மற்றும் பண்பாடு–அருங்காட்சியகங்கள் (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)*

*85. மானியக் கோரிக்கை எண் 29–தொல்லியல் (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)*

*86. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) மற்றும் பாசனம் (பொதுப் பணித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)*

*87. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)*

*88. சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)*

TRUTH ALONE TRIUMPHS

---